மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 59/2017 நாள்– 26.06.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– மு.செய்யது இப்ராஹிம்சா (வா.சா.2) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் சிவகாசி கோட்ட கலால் அலுவலராக (Divisional Excise Officer) ஆக பணிபுரிந்து கடந்த 31.5.2023 ம் தேதி வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்று திருமங்கலத்தில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.1.2018 முதல் 7.11.2018 வரை சிவகாசி தீப்பெட்டி தொழிற்சாலை ஆய்வு தனிவட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் எனக்கு வெம்பகோட்டை வட்டம் சேவைக்காரன்பட்டி கிராமம் சர்வே எண்.35/1, 35/6, ராஜலட்சுமி பயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு தொழிற்சாலை கட்டிடம் கட்ட வழங்கிய அனுமதியை ரத்து செய்யக் கோரி கருப்பாயம்மாள் அனுப்பிய மனுவின் பேரில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி இடத்தினை புலதணிக்கை செய்தும் விரிவான அறிக்கை அனுப்புமாறு சிவகாசி தீப்பெட்டி மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வு தனி வட்டாட்சியராக எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த உத்தரவின்படி 28.2.2018 ம் தேதி நான் ஆய்வு செய்தேன். நான் ஆய்வு செய்த போது சர்வே எண்.35/1 மற்றும் 35/6 ல் எந்தவித கட்டிடங்களும் இல்லாமல் காலி நிலமாக விளைநிலங்கள் எதுவும் இன்றி இருந்தது. சங்கரபாண்டியபுரம் மேல்நிலைப்பள்ளியில் பாதை ஏற்பட்டு தொழிற்சாலையின் மெயின் கதவுக்கு அருகில் மேற்கு பக்கம் பாதை சென்று

ஓடையுடன் இணைந்து மீண்டும் பட்டா நிலங்கள் வழியாக பாதை செல்கிறது. மேற்கண்ட தொழிற்சாலைக்கு பாதை வசதி உள்ளதா, இல்லையா, ஓடையினை ஆக்கிரமிப்பு செய்து பாதை ஏற்பட்டுள்ளதா என்பதை வெம்பக்கோட்டை நில அளவர் மூலம் அளவீடு செய்து வெம்பக்கோட்டை வட்டாட்சியர் மூலமாக அறிக்கை பெறலாம் என்று நான் அறிக்கை சமர்ப்பித்தேன். பள்ளிக்கூடம் மைதானத்தில் இருந்து புதிதாக ஆரம்பித்து இருந்த மேற்சொன்ன பாதை வழியாக தொழிற்சாலைக்கு பாதை ஏற்படுத்தி உள்ளார்களா அல்லது ஆக்கிரமிப்பு ஏற்படுத்தியுள்ளார்களா என்பதுபற்றி எனக்கு தெரியாது. நில அளவையர் மூலம் அளந்தால் மட்டுமே தெரியும். விளை நிலங்கள் இருக்ககும் இடத்திற்கு அருகில் பட்டாசு தொழிற்சாலை அமைப்பதற்கு ஆட்சேபனை இருந்தால் அங்கு பட்டாசு தொழிற்சாலை அமைக்க கூடாது என்றால் சரிதான். நிலவியல் பாதை என புலப்படவரைபடத்தில் வகைப்பாடு செய்யப்பட்ட நிலம் ஏதேனும் இருந்தால் அதனை பட்டாசு தொழிற்சாலைக்கு பாதையாக பயன்படுத்திக்கொள்ளலாம். சர்வே எண்.35/1 மற்றும் 35/6 வழியாக அந்த பாதை செல்கிறதா என்றால் அதுபற்றி என்னால் சொல்லமுடியாது. அதை நிலஅளவையர் மட்டுமே சொல்ல முடியும். நான் ஆய்வு செய்தபோது பள்ளி மைதானத்தில் இருந்து ஒரு பாதை போன்ற அமைப்பு உருவாகி ஓடை வழியாக சென்று மறுபடியும் பட்டா நிலங்கள் வழியாக செல்கிறது. அந்த பாதை எந்தெந்த சர்வே எண்கள் வழியாக செல்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. அதை நிலஅளவையர் தான் சொல்ல முடியும். பட்டாசு தொழிற்சாலைக்கு இரண்டு பாதைகள் இருந்தது. ஒன்று ஓடைவழியாக தொழிற்சாலைக்கு பட்டா நிலங்கள் வழியாக செல்லும் ஒரு பாதையும் மற்றொன்று பள்ளியின் மைதானத்தில் இருந்து பாதை ஏற்பட்டு தொழிற்சாலையின் மெயின் கதவு அருகே மேற்கு பக்கம் பாதை சென்று ஓடையுடன் இணைந்து மீண்டும் பட்டா நிலங்கள் வழியாக பாதை செல்கிறது. அந்த ஓடை சர்வே எண்கள்.35/1 மற்றும் 35/6 நிலங்களுக்கு எந்த பக்கத்தில் இருக்கிறது என்று என்னால் சொல்லமுடியாது. அதை சர்வேயரால் மட்டுமே சொல்ல முடியும். பள்ளிக்கூட மைதானத்தில் இருந்து தொழிற்சாலையின் மெயின் கதவிற்கு அருகே வரை செல்லும் பாதை போன்ற அமைப்பு எந்தெந்த சர்வே எண்கள் வழியாக செல்கிறது என்று எனக்கு தெரியாது. பள்ளிக்கூட மைதானத்தில் இருந்து பட்டாசு தொழிற்சாலையின் மெயின் கதவு வரை செல்லக்கூடிய பாதை என்ன என்ன

அமைப்புகள் வழியாக செல்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. மேற்படி விவரங்களுக்காக நான் தாக்கல் செய்யும் ஆவணத்திற்கான நகல் வா.சா.ஆ.34 ஆகும்.

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

சர்வே எண்.35/1 மற்றும் 35/6 சொத்து அருகில் விளைநிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சங்கரபாண்டியபுரம் மேல்நிலை பள்ளிக்குள் தொழிற்சாலைக்கு செல்வதற்கான பாதை எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான்.

7ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

சரியான முறையில் பாதை இருந்தால் மட்டுமே தொழிற்சாலை அமைப்பதற்கான உரிமம் வழங்கப்படும் என்றால் சரிதான். சர்வே எண்.35/1 மற்றும் 35/6 சொத்து அருகில் விளைநிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சங்கரபாண்டியபுரம் மேல்நிலை பள்ளிக்குள் தொழிற்சாலைக்கு செல்வதற்கான பாதை எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான்.

8ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி

சர்வே எண்.14/2ல்தான் வண்டிப்பாதை செல்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா பாதை சர்வே எண்கள்.12, 13, 14, 15, 16, 17, 35 வழியாக சென்று மங்கம்மாள் கோவில் வழியாக செல்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.35/1 மற்றும் 35/6 சொத்து அருகில் விளைநிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சங்கரபாண்டியபுரம் மேல்நிலை பள்ளிக்குள் தொழிற்சாலைக்கு செல்வதற்கான பாதை எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.